இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி பிறந்த நாள்!

# ‘உங்களின் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனைவருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளி வீசிடுக!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூலை 8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள செய்தியில், “உங்கள் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனைவருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளிவீசிடுக!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன், என்றென்றும் சி.எஸ்.கே. அணியின் தல எனப் போற்றப்படும் எம்.எஸ்.தோனி அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

உங்கள் சாதனைகள் மற்றும் உங்கள் எளிமையான தொடக்கங்கள் இந்தியா முழுவதும் உள்ள எண்ணற்ற இளைஞர்களின் வாழ்க்கையில், குறிப்பாக சாதாரண பின்னணியிலிருந்து வந்தவர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.



உங்கள் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் நீங்கள் தொடர்ந்து ஒளி வீசிடவும், அனைவருக்கும் ஊக்கமளிக்கவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தோனேசியா - பாகிஸ்தானில் நிலநடுக்கம்!

*ஜகார்த்தா, ஜூலை 8-*

*பாகிஸ்தானில் நேற்று காலை 5 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக நில அதிர்வு தேசிய மையம் தெரிவித்துள்ளது.*

*இந்த நிலநடுக்கம் 170 ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. இதனால் சேதம் ஏற்பட்டதாக தகவல் ஏதும் கிடைக்கவில்லை.*

*அதே வேளையில் இந்தோனேசியாவில் 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஜகர்த்தா நேரப்படி நள்ளிரவு 12.13 மணிக்கு (இந்திய நேரப்படி இன்று அதிகாலை 1.48) ஏற்பட்டுள்ளது.*

*தனிம்பார் தீவு மாவட்டத்தின் வடமேற்கில் 207 கி.மீட்டர் தொலைவில் 131 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் சுனாமி அலை உருவாவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2023) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் திருக்கோயில்கள் சார்பில் 34 இணைகளுக்கான திருமணங்களை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

# மிக சிறப்பாகச் செயல்படுகிறது இந்து சமய அறநிலையத்துறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதில் இந்து சமய அறநிலையைத் துறையும் மற்ற துறைகளோடு போட்டி போட்டுக்கொண்டு மிக, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கு நாடு நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறது.

கோயில்கள் மிகச் சிறப்பாகவும் சீராகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்து சமய அறநிலையத் துறையை நம்முடைய நீதிக்கட்சி உருவாக்கியது என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

‘கோவில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது’ என்று பராசக்தி திரைப்படத்தில் அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வசனம் எழுதினார். அப்படி கோயில்களில் எந்தத் தவறுகளும் நடந்துவிடக் கூடாது என்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்பட்டார் என்பதை உணர்ந்து இன்றைக்கு திராவிட மாடல் அரசு அதே வழியில் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

**அறநிலையத்துறையின் பொற்காலம்!**

தலைவர் கலைஞருடைய ஆட்சிக்காலம் என்பது அனைத்துத் துறைகளிலும் பொற்காலமாக இருந்ததைப் போலவே, இந்து சமய அறநிலையத் துறையிலும் இன்றைக்கு ஒரு பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

நான் பெருமையோடு சில செய்திகளை, சாதனைகளைப் பட்டியலிட விரும்புகிறேன். நம்முடைய கழக ஆட்சி மலர்ந்த பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான திருப்பணிகள், வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழமையான கோயில்களை, பழமை மாறாமல் சீர்செய்து குடமுழுக்கு விழாவை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அதேபோல் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்துதரப்பட்டுள்ளன. திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயல்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3,986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

* 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

* திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழி முறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற கருத்தியல் என்பது இதுதான். நம்முடைய ஆட்சியின் நோக்கத்தை இன்றைக்கு நீதிமன்றமும் அங்கீகரிக்கக் கூடிய காலமாக ஏன், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை அமைந்திருக்கிறது.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த நிதியாண்டில் மட்டும் 5,078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதனை நான் சில மாதங்களுக்கு முன்பு அறிவிப்பாக வெளியிட்டேன்.

கடந்த காலத்தில் 1000 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள 1000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

நமது அரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயில்களின் எண்ணிக்கை 1250 ஆகவும், நிதியுதவி ரூ.2 இலட்சமாகவும் உயர்த்தி அறிவிக்கப்பட்டது. இதற்காக 50 கோடி ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

ஏழை இணையர்க்கு 50,000 ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசைகளோடு திருமணம் நடத்தி வைத்தல், 2 ஆண்டுகளில் 836 கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு, 764 கோயில்களில் அன்னதானம், 8 கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், 15 கோயில்களில் மருத்துவமையம், 15,000 கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம், திருத்தேர் மராமத்து மற்றும் புதிய திருத்தேர் உருவாக்குதல் என இன்னும் பல பணிகள் முழு வீச்சில் இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் நாம் மேற்கொண்டு வருகிறோம். இவை அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதியோடு அதிக இடங்களில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

**அறநிலையத்துறையில் ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்!**

இதன் மூலமாக கோயில்கள் சீரமைகின்றன. பக்தர்கள் மன நிறைவை அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைத்தான் நம்முடைய அரசும் விரும்புகிறது. இது தான் திராவிட மாடல் அரசினுடைய நோக்கம்!

மறைந்த பெரியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ‘கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்’ என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன.

**“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!”** என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில் தான் 34 இணையருக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படுகின்றன.

**தமிழ்ப் பெயர் சூட்டி தமிழ் உணர்வூட்டுங்கள்!**

இந்தத் துறைக்கு, “இந்து சமயத் துறை” என்று பெயரல்ல, “இந்து சமய அறநிலையத் துறை” என்று பெயர். அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற அறப்பணிகளை தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். அதே நேரத்தில் நம்முடைய மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், தமிழ் உணர்வை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள்.

**வீட்டிற்கு விளக்குகளாய் நாட்டிற்குத் தொண்டர்களாய் இலங்கிடுக!**

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், “வீட்டிற்கு விளக்குகளாய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” இருந்து நீங்கள் பாடுபடுங்கள், பணியாற்றுங்கள், உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு, வாழ்க மணமக்கள், வாழ்க மணமக்கள் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

வேலையின்மை, விலைவாசி உயர்வால் மக்கள் துயரம்!

# பா.ஜ.க.வின் வெற்று முழக்கங்கள் 2024 தேர்தலில் பலிக்காது!

## அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உறுதி!

*புதுடெல்லி, ஜூலை 8 -*

*பா.ஜ.க.வின் வெற்று முழக்கங்களுக்கு 2024 தேர்தலில் மக்கள் பதிலளிப்பார்கள் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.*


*இதுகுறித்து அவர், தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது: -*

*“மோடி அரசின் கொள்ளையால் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.*

*ஆனால், பா.ஜ.க. அதிகார வெறியில் மூழ்கியிருக்கிறது. காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது.*

*நாட்டில் வேலையின்மை விகிதம் 8.45 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. கிராமங்களில் வேலையின்மை விகிதம் 8.73 சதவிகிதமாக உள்ளது. கிராமங்களில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் தேவை அதிகமாக உள்ளது, ஆனால் வேலை இல்லை. கிராமப்புற ஊதிய விகிதம் குறைந்துள்ளது.*

*இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, உங்கள்*



*தோல்விகளை விளம்பரங்களின் மூலம் மறைத்துவிட வேண்டும் என்பதற்காகவே நீங்கள் தேர்தலுக்கு முன்னதாக ‘அச்சே தின்’ (நல்ல நாட்கள் வந்துகொண்டிருக்கின்றன), ‘அமிரித் கால்’ (நாடு சுதந்திரமடைந்த 75 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும் விழா) போன்ற முழக்கங்களை முன்வைத்து செயல்படுகிறீர்கள் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.*

*ஆனால் இந்த முறை அது நடக்காது, மக்கள் விழிப்புணர்வு அடைந்து, பா.ஜ.க.வுக்கு எதிராக வாக்களித்து உங்கள் வெற்று முழக்கங்களுக்கு பதிலளிப்பார்கள். பா.ஜ.க.வை ஆட்சியில் இருந்து அகற்றுவார்கள்.” இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.*

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் வேண்டுகோள்!

*கடலூர், ஜூலை 8 -*

*கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது.*

*கடலூர் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 2023ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு பணிகள் 21.07.2023 வெள்ளி முதல் 21.08.2023 திங்கள்*



*வரை நடைபெறவுள்ளது.*

*அதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*அதுசமயம் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியில் மற்றும் சிறப்பு முகாம்களில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2) முன்னாள், இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*குறிப்பு:*

*வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என கடலூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (6.07.2023) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்திட பொதுவான கூட்டுறவுச் சந்தை (Coop Bazaar) செயலியினை துவக்கி வைத்தார். உடன் உணவு மற்றும் கூட்டுறவுச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந. சுப்பையன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) திருமதி விஜயராணி ஆகியோர் உள்ளனர்.